ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2373/51 - 2024 මාර්තු මස 01 වැනි සිකුරාදා - 2024.03.01

*2373/51 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**தென் மாகாணத்தின் மாகாண சபை**

தென் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவித்தல்

***262 ஆம் அதிகாரம் கொண்ட உள்ளூராட்சி தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ.(4) ஆம் பிரிவின் கீழ் உள்ள விதிமுறை***

*262 ஆம் அதிகாரம் கொண்ட உள்ளூராட்சி தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ.(4) ஆம் பிரிவின்படி எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் நடத்தும் அதிகாரியின் இலக்கம் 2369/02 மற்றும் 2024.01.29 ஆந் திகதியிட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் எல்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளராக திரு. மல்லியாவடு நளின் சமிந்த பிரியதர்ஷன என்பவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பது தெரியப்படுத்தப்பட்டுள்ளதோடு, மேற்படி தலைவர் எல்பிட்டிய பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை 21.02.2024 அன்று சபை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சபையில் சமர்ப்பித்து ஆதரவாக 13 வாக்குகளும் எதிராக 14 வாக்குகளும் பெற்று மேற்படி வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதாலும் ;*

*2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவின் மூலம் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் பிரிவு 169 இன்படி, மேற்படி வரவு செலவுத் திட்டம் இரண்டாவது முறையாக மீண்டும் 28.02.2024 ஆந் திகதியன்று மன்றில் சமர்ப்பிக்கப்பட்டு ஆதரவாக 12 வாக்குகளும் எதிராக 14 வாக்குகளும் பெற்று மேற்படி வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதாலும் ;*

*குறித்த தலைவர் 2024.02.28 ஆந் திகதி எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் அதிகாரிக்கு தனது இராஜினாமாவை அறிவித்துள்ளதாலும் ;*

1A - PG 6663 — 09 (2024/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*262 ஆம் அதிகாரம் கொண்ட உள்ளூராட்சி தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ.(4) ஆம் பிரிவின்படி இடைக்கால உத்தரவின்படி, எல்பிட்டிய பிரதேச சபை கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபையாகக் கருதப்பட வேண்டியதாலும் ;*

*262 ஆம் அதிகாரம் கொண்ட உள்ளூராட்சி தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ.(4) ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2(1)(அ) இன் மூலம் தென் மாகாண ஆளுநர் கலாநிதி வில்லியம் விஜேசிங்க கமகே ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி எல்பிட்டிய பிரதேச சபையின் 2024.11.04 ஆந் திகதி வரையான பதவிக்காலத்திற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் மற்றும் ஏனைய எழுதப்பட்ட சட்டங்கள் மூலம் எல்பிட்டிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொள்வதற்காகவும், அதிகாரம் செலுத்தவும் எல்பிட்டிய பிரதேச சபையின் விசேட ஆணையாளராக பென்தொட்ட பதிரணகே அனுஷா சுஜானி பிரியதர்ஷனீ என்பவரை நியமிக்கிறேன்.*

**கலாநிதி வில்லியம் விஜேசிங்க கமகே,**
கௌரவ ஆளுநர்,
தென் மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
தென் மாகாணம்,
கீழ் டிக்சன் வீதி,
காலி,
2024, பெப்புருவரி 29.

EOG 03-0017